**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**

**30.04.2020 ம் தேதி வியாழ கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின்**

**நகர்மன்ற சாதாரன கூட்டத்தின் பொருட்கள்**

**தலைமை– திரு.வீ.பாஸ்கரன்.எம்.ஏ.,**

**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**

**1)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று தடுப்பு பணிக்கு தேவையான பொருட்கள் விநியோகம் செய்வதற்காக விலைப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | M/s. Southern Solid Waste Management Service. Pollachi | M/s .Stevewin Associates, Mulagumood | M/s .Relian Global Green Energy & Co, Coimbatore |
|---|---|---|---|---|
| 1. | Corona Kit | Rs.2000 | Rs.1600 | Rs.9.18 |
| | Safety Boot | Rs.1300 | Rs.1200 | |
| | Use and Throw Gloves | Rs.20 | Rs.15 | |
| | Reflector Jackets | Rs.500 | Rs.450 | Rs.15.22 |
| | Helmet | Rs.470 | Rs.450 | Rs.454.65 |
| | Gloves | Rs.220 | Rs.200 | Rs.23.01 |
| | Triple Layer Mask | | | Rs.293.82 |
| | Non Woven Corona Kit | | | |
| | 6% Hypo Chlorite Solution | | | |
| | Lysol | | | |
| 2. | Bleaching Powder | Rs.81.42 | Rs.59 | |
| | Lysol | Rs.255.23 | | |
| | Lime Powder | | Rs.21 | Rs.23 |
| | 1% Hypo Chlorite Solution | | Rs.51 | Rs.54 |
| | N95 Mask | | Rs.370 | Rs.350 |
| | Mask | | Rs.22 | Rs.20 |
| | Non Woven PPE | | Rs.620 | Rs.600 |

**அலுவலக குறிப்பு –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனங்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

3) கொரோனா தொற்று தடுப்பு அவசர அவசியம் கருதி குறைவான விலைப்புள்ளி வழங்கிய நிறுவனங்கள் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டால் மற்ற நிறுவனங்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

4) கொரோனா தொற்று தடுப்பு பணி அவசர அவசரம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்.

2) தமிழக அரசு நிதித் துறை, சென்னை கடிதம் எண்.74/JS(MA)/Finance (Salaries)/2020 நாள் 01.04.2020 ன்படி கொரோனா தொற்று நோய் (COVID - 19) தடுப்பு நடவடிக்கைகளுக்கான கீழ்க்கண்ட பணிகள் ஒப்பந்தப்புள்ளி கோராமல் மேற்கொள்ளுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட விபரம் தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1 பாதுகாப்பு கவச உடைகள் வாங்குதல்
2 கிருமி நாசினி தெளிப்பான்கள் வாங்குதல்
3 கிருமி நாசினிகள் வாங்குதல்
4 ஆதரவற்றோர் தங்கும் இடம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்
5 ஆதரவற்றோர் தங்கும் இடத்திற்கு தேவையான காய்கறி மற்றும் மளிகை பொருள் வாங்குதல்
6 அவசர தேவைக்கான கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல்
7 தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகத்திலிருந்து அத்தியாவசிய பொருள்கள் வாங்குதல்

**அலுவலக குறிப்பு –1)** அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் மேற்படி கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்ய அனுமதி வழங்கலாம்.

2) 2020–2021 ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் அனுமதிக்கவும் அனுமதி வழங்கலாம்

3) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணி விபரம் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | 1% Hypochlorite solution<br>50 லிட்டர் வாங்குதல் | திரு. உசைன்<br>ஒப்பந்ததாரர், கூடலூர் | ரூ.25500.00 |
| 2 | Lysol<br>30 லிட்டர் வாங்குதல் | திரு. உசைன்<br>ஒப்பந்ததாரர், கூடலூர் | ரூ.29400.00 |

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

4) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரொனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணி விபரம் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | கொரோனா விழிப்புணர்வு<br>கை பிரதிகள் 20000 எண்ணம்<br>அச்சிட்டு வழங்குதல்<br>( தமிழ் மற்றும் மலையாளம் மொழிகளில்) | திருவாளர்கள். கிருஷ்ணா<br>ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>கூடலூர் | ரூ.21050.00 |
| 2 | கொரோனா விழிப்புணர்வு<br>கை பிரதிகள் 15000 எண்ணம்<br>அச்சிட்டு வழங்குதல் ( தமிழ் மொழியில் ) | திருவாளர்கள். கிருஷ்ணா<br>ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>கூடலூர் | ரூ.14925.00 |

| | | | |
|---|---|---|---|
| 3 | கொரோனா விழிப்புணர்வு கை பிரதிகள் 5000 எண்ணம் அச்சிட்டு வழங்குதல் ( மலையாளம் மொழியில் ) | திருவாளர்கள். கிருஷ்ணா ஆப்செட் பிரிண்டர்ஸ் கூடலூர் | ரூ.4975.00 |

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

**5)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் LCV வாகனம் TN 43 Y **8303** ல் ஏற்பட்ட சிறு பழுதுகளை நீக்கம் செய்வதற்கான பட்டியல் வரப்பட்டுள்ளது. பட்டியல் தொகை ரூ.**2730/–** ஐ இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு.என். சரவணன் அவர்களுக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** **1)** அனுமதி வழங்கலாம்.

**2)** பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை ஏற்கலாம்.

**6)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரொனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15** ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணி விபரம் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | கிருமி நாசினி தெளிப்பான்கள் 6 எண்ணம் வாங்குதல் | திருவாளர்கள். ராஜாளி பெர்ட்லைசர் அன்ட் கெமிக்கல்ஸ், கூடலூர் | ரூ.66300.00 |
| 2 | சோப்பு ஆயில் மற்றும் Hand Sanitizer வாங்குதல் | திருவாளர்கள். இந்தியன் ஏஜென்சீஸ் கூடலூர் | ரூ.11150.00 |

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

**7)** இந்நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு **2020–2021** ம் நிதியாண்டில் அரிசி கொள்முதல், காய்கறி கொள்முதல், சமையல் எரிவாயு கொள்முதல், பணியாளர்கள் ஊதியம், மளிகை கொள்முதல், டோக்கன் கொள்முதல் சிறு பழுதுகள் மற்றும் பாத்திரங்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**38.00** இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

**8)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று நோய் (COVID – **19**) பரவாமல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு தேவையான கிருமி நாசினிகள், முகவுறைகள், ஸ்பிரேயர்கள், கவச உடைகள் ஆகியவை வாங்குதல் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான உத்தேச செலவினம் ரூ.**9.50** இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –1)** அனுமதி வழங்கலாம்.

**2)** அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் மேற்படி கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்ய அனுமதி வழங்கலாம்.

**3)** **2020–2021** ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் அனுமதிக்கவும் அனுமதி வழங்கலாம்.

**4** பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதனையும் ஏற்கலாம்.

9) இந்நகராட்சிக்குட்பட்ட 27 வது மைல் உரக்கிடங்கில் வரும் கழிவுகள் நீரூற்று தொட்டியில் கலந்து பொதுமக்களின் பயன்படுத்தும் குடிநீரில் கலந்து வருகிறது என திரு.மாதய்யா என்பவர் புகார் தெரிவித்துள்ளதால் மேற்படி பகுதியான கே.கே.நகர், நடு கூடலூார் மற்றும் பாடந்துரை கிராமம் செலுக்காடி உரக்கிடங்கு ஆகிய மூன்று பகுதியில் மாசுகட்டுப்பாடு வாரியம், உதகமண்டலம் அவர்களின் மூலம் நீரூற்று தொட்டியில் இருந்து வரும் குடிநீர் பரிசோதனை செய்தமைக்கு ரூ.15230/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

10) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு பிரதான குடிநீர் திட்டங்களான ஹெலன் குடிநீர் திட்டம், பாண்டியார் புன்னம்புழா குடிநீர் திட்டம், தொரப்பள்ளி ஆறு மற்றும் பெல்மாடி குடிநீர் திட்டம் ஆகிய நான்கு குடிநீர் ஆதாரங்களிலிருந்து தினசரி 4.45 MLD குடிநீர் பெறப்பட்டு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை 90LPCD வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் குடிநீரில் குளோரின் கலந்து கொடுப்பதற்கு கோழிப்பாலம், கோக்கால், தொரப்பள்ளி மற்றும் காமராஜ் நகர் ஆகிய நான்கு பகுதிகளிலும் குளோரினேசன் தொட்டி அமைக்கப்பட்டு குடிநீரில் கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது கையிருப்பில் உள்ள Liquid Chlorination முடியும் நிலையில் இருப்பதால் புதியதாக விநியோகம் பெறுவதற்கு தோரயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சம் ஆகும். மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளுக்கும் சீராக குடிநீர் விநியோகம் செய்வதற்கும் டெங்கு காய்ச்சல் மற்றும் கொரோணா வைரஸ் பரவுதல் தடுக்க மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி மாவட்ட சட்டம் 1920 ல் பிரிவு 15 பொது நிதி 2020–2021 ன் கீழ் பணியினை மேற்கொள்ள நகராட்சிக்கு கடந்த முறை Liquid Chlorination விநியோகம் செய்த திருவாளர்.Mitra Associates அவர்களிடமிருந்து விநியோகம் பெறுவதற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

11) இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் இயங்கும் TN 43 Z 4443 வாகனத்தின் 6 டயர்கள் தேய்மானம் அடைந்துள்ளதால் கோடைகாலம் நிலவி வருவதால் மேற்படி வாகனம் மூலம் குடிநீர் கொண்டு செல்ல இயலாத நிலையில் உள்ளதால் 6 டயர்களை ரீபெல்ட் (Rebuilt) செய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.30000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

12) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 ஒ.வி.எச் சாலை சுரக்கப்பட்டினம் பகுதியில் இந்நகராட்சிக்கு சொந்தமான வதைக்கூடம் பழுதடைந்துள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து நகராட்சி பொறியாளர் குடியிருப்பு கட்டிடம் கட்ட B Grade வாரியாக 1000 சதுர அடிக்கு கட்டிடம் கட்ட தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.29.00/– இலட்சத்திற்கு பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

13) இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் இயங்கும் TN 43 Z 4443 குடிநீர் வாகனத்திற்கு ஸ்டியரிங்பாக்ஸ் பழுதடைந்துள்ளதால் தற்போது வாகனம் இயக்க முடியாத நிலையில் தற்பொழுது கோடைக்காலம் வருவதால் குடிநீர் பணிகளை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி திரு. சாஜன், ஓட்டுநர் சொந்த செலவில் பழுதினை சரி செய்தமைக்கு தொகை ரூ.17000/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

14) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் LCV வாகனம் TN 43 Y 8293 ல் ஏற்பட்ட சிறு பழுதுகளை நீக்கம் செய்வதற்கான பட்டியல் வரப்பட்டுள்ளது. பட்டியல் தொகை ரூ.3680/– ஐ இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு. என். சரவணன் அவர்களுக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

15) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் LCV வாகனம் TN 43 Y 0393 ற்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் விநியோகஸ்தரிடம் டயர் ஒன்று வாங்கியதற்கான பட்டியல் வரப்பட்டுள்ளது. பட்டியல் தொகை ரூ.2350/–ஐ இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு. என். சரவணன் அவர்களுக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

16) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு தேவையான எரிவாயு கலன்கள் 100 எண்ணிக்கை வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.25000/– ற்கும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதனையும் ஏற்கலாம்.

17) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்புதற்காக கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், கொசு மருந்து தெளித்தல் மற்றும் புகை மருந்து தெளிக்கும் பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் 30 தனியார் துப்புரவு பணியாளர்களை பணியமர்த்தவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1500000/– ற்கும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதனையும் ஏற்கலாம்.

18) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியினை மேற்கொள்வதற்காக தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்காக விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | திரு. உசைன் ஒப்பந்ததாரர் கூடலூர் | திரு. ராஜேஷ் ஒப்பந்ததாரர் கூடலூர் |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியினை மேற்கொள்வதற்காக தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்தல் | ரூ.668/– (நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு) | ரூ.674/– (நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு) |

**அலுவலக குறிப்பு –1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளிவழங்கிய **திரு.உசைன்,ஒப்பந்ததாரர் கூடலூர்** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

19) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியினை மேற்கொள்வதற்காக புகை மருந்து இயந்திர எரிவாயு கலன்கள் விநியோகம் செய்வதற்காக விலைப்புள்ளிகள் கோரரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | திரு. உசைன் ஒப்பந்ததாரர் கூடலூர் | திரு. ராஜேஷ் ஒப்பந்ததாரர் கூடலூர் |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்புபணியினை மேற்கொள்வதற்காக புகை மருந்து இயந்திர எரிவாயு கலன்கள் விநியோகம் செய்தல் | ரூ.203/– (சிலிண்டர் ஒன்றுக்கு) | ரூ.209/– (சிலிண்டர் ஒன்றுக்கு) |

**அலுவலக குறிப்பு –1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளிவழங்கிய **திரு.உசைன்,ஒப்பந்ததாரர்கூடலூர்** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**20)** இந்நகராட்சியில் இயங்கி வரும் எரிவாயு தகனமேடைக்கு எரிவாயு கலன்கள் வாங்குவதற்கு **2020–2021** ம் நிதியாண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.**2.00** இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –1)** அனுமதி வழங்கலாம்

**2)** அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் மேற்படி கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்ய அனுமதி வழங்கலாம்.

**3)** 2020–2021 ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் அனுமதிக்கவும் அனுமதி வழங்கலாம்.

**4)** பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதனையும் ஏற்கலாம்.

**21)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று நோய் (COVID – 19) பரவாமல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு தேவையான கிருமி நாசினிகள், முகவுறைகள், ஸ்பிரேயர்கள், கவச உடைகள் ஆகியவை வாங்குதல் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான உத்தேச செலவினம் ரூ.**4.00** இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –1)** அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் மேற்படி கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்ய அனுமதி வழங்கலாம்.

**2)** 2020–2021 ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் அனுமதிக்கவும் அனுமதி வழங்கலாம்.

**3)** பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதனையும் ஏற்கலாம்.

**22)** கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் ஏப்ரல் 2020 முதல் செய்யப்பட உள்ள தகவல் மையத்திற்கு தேவையான பதிவேடு மற்றும் படிவங்கள் அச்சிடுதல், பெறுதல் ஆகிய பணிகளுக்கு ஏற்படும் செலவினங்களுக்கு தோராய செலவினம் ரூ.**3.00** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

**23)** இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தாபுரி உணவகம் முதல் துப்புக்குட்டிபேட்டை வழி காசிம்வயல் வரை செல்லும் நீரோடையில் குப்பை கழிவுகள் மற்றும் தேவையற்ற பொருட்களை பொதுமக்கள் நீரோடையில் வீசப்படுவதால் குப்பைகள் தேக்கமடைந்து கொசு உற்பத்தி ஏற்பட்டு சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் இப்பகுதியில் உள்ள நீரோடையை தூர்வாரி சுத்தம் செய்ய தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**6.70** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

**24)** இந்நகராட்சியில் சொத்துவரி பெயர்மாற்றம் செய்ய வரப்பெறும் விண்ணப்பங்களுக்கு விண்ணப்பதாரரின் கிரய பத்திரம் மற்றும் உயில் பத்திரம் பதிவு செய்யப்பட்டு தற்போது சந்தை மதிப்பு (Guide line value) 1 லட்சத்திற்கு ரூ.100/– வீதம் பதிவு செய்யப்பட்ட சந்தை மதிப்பின் கீழ் பெயர் மாற்றம் கட்டணம் வசூல் செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –1)** அனுமதி வழங்கலாம்

2) இந்நகராட்சியில் பெறப்படும் சொத்துவரி பெயர் மாற்றம் விண்ணப்பங்களுக்கு உரிய பெயர்மாற்ற கட்டணம் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சந்தை மதிப்பீட்டின்படி பெயர்மாற்றக் கட்டணம் 1 இலட்சத்திற்கு ரூ.100/– என்ற வீதம் வசூல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

25) கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களின் செலுத்தக்கோரும் கட்டணங்களை நகர்மன்ற தீர்மானம் எண் 537 நாள் 30.12.2020ல் தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி பெறப்பட்டு ஐந்தாண்டுகளுக்கு மேல் ஆவதால் அதனை திருத்தம் செய்து கட்டணங்களை மாற்றியமைத்து கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – நகர்மன்ற தீர்மானம் எண் 537 நாள் 30.12.2016 ல் நிர்வாக கட்டணமாக 60% வசூலிக்கப்பட்டுள்ள நிலையில் ஐந்தாண்டுகளுக்கு மேல் ஆவதால் கட்டணங்களை உயர்த்தி கட்டிட விண்ணப்பத்திற்கு நிர்வாக கட்டணம் ரூ.2000/– நிர்ணயம் செய்து வசூலித்துக் கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

26) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.209/2020/TP3 நாள் 28.04.2020 ன் படி நகராட்சி பகுதிகளில் கட்டிட உரிமம் வழங்கும் கட்டிடங்களுக்கு அபிவிருத்திக்கட்டணம் சாலை மற்றும் குடிநீர் கட்டணம் மனையிட கட்டணம் ஆகியவைகள் வசூலிக்க சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இது பேரூராட்சியகா இருந்து நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளதால் இக்கட்டணங்கள் இதுவரை வசூலிக்கப்படவில்லை. எனவே கீழ்கண்டவாறு கட்டணங்களை கட்டிட உரிமம் வழங்கும்பொழுது மனைப்பிரிவிற்கு 1 $M^2$ – ரூ.5, கட்டிடத்திற்கு 1 $M^2$ – ரூ.10 என வசூலித்து கொள்ளவும் , மேலும் இதனை 01.05.2020 முதல் அமுல்படுத்தி செயல் படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – 1)** அனுமதி வழங்கலாம்

2) நகராட்சி நிர்வாக ஆணையாரின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அபிவிருத்தி கட்டணம் சாலை மற்றும் குடிநீர் வசதிகளுக்கான கட்டணம் மற்றும் மனைப்பிரிவுகளுக்கான கட்டணம் ஆகியவைகளை 01.05.2020 முதல் கட்டிட உரிமம் வழங்கும் உரிமைதாரர் வசம் வசூலித்து கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

27) நீலகிரி மாவட்டம் , கூடலூர் நகராட்சியில் உள்ள போக்குவரத்து துறைக்கு சொந்தமான கூடலூர் பேருந்து நிலையம் ரூ.4.75 கோடி செலவில் விரிவாக்கம் மற்றும் மேம்படுத்துதல் பணிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 31.12.2017 அன்று MGR நூற்றாண்டு விழாவில் அறிவிக்கப்பட்டது. ரூ.4.75 கோடிக்கு நிதி ஒதுக்கப்பட்டு நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டு பணியினை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை வரைப்படம் மற்றும் மதிப்பீடு தயார் செய்ய தோராயாமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.00 இலட்சம் ஆகும் இப்பணியினை திட்ட ஆலோசகர்(Consultant) மூலம் தயார் செய்ய விலைப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

28) கூடலூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மாடு வதை செய்யும் அறுவை கூடத்திற்கு 2020–21 ம் ஆண்டிற்கு பொது ஏலம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிமம் வசூல் செய்ய செய்தி தாளில் விளம்பரம் செய்தல் ஏலம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் இதற்கு ஏற்படும் தோராய செலவினத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**ஏலம் கோரும் இனங்கள்**</u>

மாடு வதை கூடம், துப்புக்குட்டிபேட்டை, கூடலூர்

**அலுவலக குறிப்பு – 2020 –21** ம் ஆண்டிற்கு ஏற்கனவே மூன்று ஆண்டுகளுக்கு முடிவுற்ற மாடு வதை செய்யும் அறுவை கூடத்திற்கு இந்நகராட்சி நிதி நிலமை உயர்த்துவதற்கு ஏதுவாக பொது ஏலம் விடவும் செய்தி தாள் விளம்பரம் செய்யவும் மற்றும் ஏற்படும் செலவினங்களை ஏற்கவும் மன்ற அனுமதி வழங்கலாம்.

**ஆணையாளர்**
**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**